# பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் (PMMSY) கடல் அலங்கார மீன்வளர்ப்பு

கடல் அலங்கார மீன்வளர்ப்பு தற்போது மிகவும் அதிக அளவில் மீனவ மகளிர் குழுக்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கு காரணம் கடல் அலங்கார மீன் வளர்ப்பில் குறைந்த காலத்தில் கிடைக்கும் அதிகபடியான லாபம் ஆகும். கடற்கரை பகுதியில் உள்ள மீனவர்கள் / மீனவ மகளிருக்கு வேலை வாய்ப்பு உருவாக்கவும், சுயதொழில் செய்து இலாபம் ஈட்டவும் இத்திட்டம் உதவியாக உள்ளது. பொதுவாக அலங்கார மீன்கள் சிமெண்ட் தொட்டிகளிலோ அல்லது கண்ணாடி தொட்டிகளிலோ வளர்க்கப்பட்டு வருகின்றது. இதன் அளவு உற்பத்தி தேவைக்கு ஏற்ப வடிவமைக்கப்படுகிறது.

**கடல் அலங்கார மீன்வளர்ப்பின் பயன்கள் :**

- குறைந்த முதலீடு
- எளிதான கட்டுமான முறை
- சுலபமான வளர்க்கும் முறைகள் மற்றும் மேலாண்மை
- குறைந்த காலத்தில் அதிக லாபம் ஈட்டலாம்
- அதிக ஏற்றுமதி விலை மதிப்பு

**கடல் அலங்கார மீன்வளர்ப்பு தொட்டிகள் :**

பெரும்பாலான மீன்வளர்ப்பு தொட்டிகள் கண்ணாடிகளை கொண்டு தயாரிக்கப்படுகின்றது. இந்த தொட்டியிலிடப்படும் நீர் சுத்தமாகவும், தெளிவாகவும், சரியான உப்புத்தன்மையுடனும் இருக்க வேண்டும். தண்ணீரில் உயிர்வளி (ஆக்ஸிஜன்) அதிகரிக்க காற்று உட்புகுத்திகளை (Aerators) பயன்படுத்தலாம்.

**தொட்டியில் வளர்க்கப்படும் கடல் அலங்கார மீன்வகைகள் :**

நூற்றுக்கும் மேற்பட்ட அலங்கார கடல் மீன்கள் இருப்பினும் சிலவகை மீன்களே பொரிப்பகங்களில் உற்பத்தி செய்யப்பட்டு வளர்க்கப் படுகின்றன. அவற்றுள் கடற்தாமரை மீன் (கிளவுன் மீன்) மிக ஏற்ற இனமாகும். அழகிய நிறத்துடனும் சாதுவாகவும் இருக்கும். இவற்றை எளிதாக பராமரிக்கலாம். இவை ஒன்றுடன் ஒன்று இணைந்து வாழ்வதால் அதிக எண்ணிக்கையிலான மீன்களை ஒரே தொட்டியில் இட்டு வளர்க்கலாம்.

**உணவிடுதல் :**

பெரும்பாலும் செறிவூட்டப்பட்ட தீவனங்களை ஒரு நாளைக்கு 4 முறை அளிக்கலாம்.

**தேவையான உபகரணங்கள் :**

- 200 சதுர அடி உள்ள கூரையுடன் கூடிய சிறிய வளர்க்கும் கொட்டகை
- கண்ணாடி தொட்டிகள் (200 – 300 லிட்டர் கொள்ளளவு) – ஆறு எண்ணிக்கை
- நீர் சேமிக்கும் தொட்டி (500 லிட்டர்) – ஒன்று
- காற்று உட்புகுத்தி (Aerators) – ஒன்று
- நீரினை வடிகட்டும் அலகு (Biofilters) – ஒன்று
- இயந்திர மோட்டார் (Motor Pump) – ஒன்று
- நீர் மற்றும் மின்சார இணைப்புகள்







## நிதியுதவி மற்றும் மானியம் சார்ந்த நடைமுறைகள் :

- பயனாளிகள் மீன் வளர்ப்பகம் நிறுவும் முன்னர் சம்மந்தப்பட்ட மாநில அரசின் மீன்வளத்துறையில் முன் அனுமதி பெற வேண்டும்.
- தொழில் நுட்பம் மற்றும் செலவீனம் சார்ந்த திட்ட அறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டும்.
- வீட்டின் பின்புறம் அலங்கார கடல்மீன் வளர்ப்பிற்கு (Rearing Unit) கட்டுமானம் செய்ய சிறிய மீன் வளர்ப்பகத்திற்கு ரூ.3.00 லட்சமும், நடுத்தர மீன் வளர்ப்பகத்திற்கு ரூ. 8 லட்சமும் உள்ள மொத்த மதிப்பீட்டில் பெண்கள் மற்றும் பட்டியலினத்தவருக்கு 60 சதவீத மானியம் ஆண்கள் மற்றும் பொது பிரிவினருக்கு 40 சதவீத மானியமும் வழங்கப்படுகிறது.
- கடல்மீன் அலங்கார விற்பனையகம் (Retail outlet / Kiosk) கட்டுமானம் செய்ய ஆகும் மொத்த மதிப்பான ரூ.10.00 இலட்சத்தில் பெண்கள் மற்றும் பட்டியலினத்தவருக்கு 60 சதவீதமும் (ரூ.6 லட்சம்) ஆண்கள் மற்றும் பொது பிரிவினருக்கு 40 சதவீதமும் (ரூ.4 லட்சம்) மானிய உதவியாக மத்திய அரசின் மூலம் வழங்கப்படுகிறது.
- மேற்கண்ட அனைத்து திட்டங்களுக்குமான நிதியுதவி, பொதுப்பிரிவினர் மற்றும் ஆண்களுக்கு 40 சதவீத மானியமும், பெண்கள் / ஆதி திராவிடர் / பழங்குடியினர் பிரிவை சார்ந்தவர்களுக்கு 60 சதவீத மானியமும் மத்திய அரசின் மூலம் வழங்கப்படும்.
- திட்டம் சார்ந்த நிதியுதவி விபரங்களுக்கு சம்பந்தப்பட்ட தமிழ்நாடு மீன்வளத்துறை அலுவலகத்தை அணுகவும்.
- திட்டம் சார்ந்த தொழில்நுட்ப விபரங்களுக்கு மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையம் மண்டபம் அலுவலகத்தை அணுகவும்.

தயாரிப்பு : கே.கே. அனிக்குட்டன், ரெ. ஜெயக்குமார், கோ. தமிழ்மணி, மு. சக்திவேல்,
பா. இரமேஷ்குமார், பி. ஜான்சன், மு. சங்கர், ஏ.கே. அப்துல் நாசர்

வெளியீடு இயக்குனர், இ.வே.ஆ.க. மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையம், கொச்சி, கேரளா
CMFRI Pamphlet No. 94/2021